**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை : செல்வி.S.அபூர்வா, B.A., L.L.B,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பழனி.**

**2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், 03–ஆம் தேதி, திங்கள்கிழமை**

**அ.வ.எண்.14/2025**

**(CNR No. TNDG08-000020-2025)**

***********

R.ரங்கநாயகம் ....வாதி

/எதிர்/

1.தங்கவேல்

2.கந்தசாமி

3.கருப்புசாமி

4.கார்த்தி ....பிரதிவாதிகள்

இந்த அசல் வழக்கானது 14.02.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 03.08.2026 ஆம் தேதியன்று என் முன்னர் விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. **A. தீபிகா** அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.A.பாலசுப்ரமணி** அவர்கள் முன்னிலையாகியும், வாதி தரப்பில் எவ்வித தகவலும் இல்லை. இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

வாதிக்கு பாத்தியப்பட்டு வாதியின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வரும் தாவா சொத்துக்களில் பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, உள்ளீட்டார்களோ எவ்விதத்திலும் தாவா சொத்துக்களில் அத்துமீறி நுழையவோ,

ஆக்கிரமிப்பு செய்யவோ, வாதியின் சுவாதீன அனுபவத்திற்கு எவ்வித இடையூறும் செய்யாமல் இருக்கும்படி பிரதிவாதிகள் பேரில் ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியும், தாவா சொத்தின் கிழபுறமாக வாதியின் தாவா சொத்தின் வரப்புகளை பிரதிவாதிகள் தன் செலவில் இடித்து அப்புறப்படுத்திக் கொள்ளவும் அதனால் வாதிக்கு பிரதிவாதிகளால் வழங்க கோரி ஒரு செயல் உறுத்துக்கட்டளை கோரியும், தாவா செலவு தொகை கோரியும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதி தரப்பில் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும், வாதி தரப்பில் எவ்வித தகவலும் இல்லை. வாதி அழைக்கப்பட்டும் ஆஜராகவில்லை. வாதி வழக்கை நடத்த முன்வராததாலும், வாதியின் வருமையிமையினாலும், வாதியின் தவறுகைக்காக இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2026ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 03ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

APOORVA S Digitally signed by APOORVA S
Date: 2026.08.03 15:56:20 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**